கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

வாக்குமூல படிவம்

**OS.No. 254/2023**

பெயர் : மாணிக்கம் பி.வா.சா : 1

த/க/பெயர் : முத்துசாமி தேதி : 02.02.2026

வா.சாட்சி 1– ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. கோ. ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது

**வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:–**

1. நான் எதுவும் படிக்கவில்லை. எனக்கு கையொப்பம் செய்ய தெரியும். தமிழில் தான் கையொப்பம் செய்வேன். என்னுடைய மனைவி பெயர் சாந்தகுமாரி ஆகும். என் மனைவி அரசு வேலையில் உள்ளாரா என்றால்? ஆமாம். சத்துணவு பணியாளராக என்னுடைய மனைவி வேலை பார்க்கிறார். இரண்டாம் பிரதிவாதியான முருகன் கோயம்புத்தூர் நகராட்சியில் வேலை பார்க்கிறார்.

2. முருகன் எத்தனை வருடங்களாக கோயம்புத்தூர் நகராட்சியில் வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. முருகனுடைய மனைவியான பாப்பாவும் என்னுடைய மனைவியும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால்? சரிதான். முருகனுக்கு திருமணம் ஆகி எத்தனை வருடம் இருக்கும் என்றால்? எனக்கு தெரியவில்லை. எனக்கு திருமணம் ஆகி 25 வருடங்கள் ஆகிவிட்டது.

3. என்னுடைய மனைவி சாந்தகுமாரி பாப்பாவிற்கு அக்கா ஆவார். எங்களுடைய திருமணத்திற்கு பின்னால் தான் பாப்பாவிற்கு திருமணம் நடைபெற்றது என்றால்? சரிதான். நாங்களும் முருகன் குடும்பத்தாரும் சுமூகமான உறவில் தான் இருக்கிறோம் என்றால்? சரிதான். தாவா சொத்து வீடாகும். மேற்படி சொத்தினை நானும் இரண்டாம் பிரதிவாரியான முருகனும் சேர்ந்து தான் கிரயம் பெற்றோம் என்றால்? சரிதான். மேற்படி கிரையம் பெற்ற தேதி எனக்கு தெரியாது.

4. தாவா சொத்து ஒரே வீடாக தான் உள்ளது. தாவா சொத்தில் தற்பொழுது யார் வசித்து வருகிறார்கள் என்றால்? நான்தான் வசித்து வருகிறேன். எனக்கு தெரியுமா என்றால்? தெரியாது நான் பார்த்தது கிடையாது. வாதியின் தாயார் வீரமாளை எனக்கு தெரியுமா என்றால்? தெரியும். வீரமாளை எத்தனை வருடங்களாக எனக்கு தெரியும் என்றால்? பத்து பதினைந்து வருடங்களாக தெரியும். என் மனைவிக்கும் வீரமாளுக்கும் இடையே சுமூகமான உறவு உள்ளது என்றால் சரியல்ல.

5. பணத்தை எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பெற்றோம் என்றால்? அது எனக்கு தெரியாது. கிரைய தொகையை யார் கொடுத்தார்கள் என்றால்? அது எனக்கு தெரியாது. பத்திர அலுவலகத்திற்கு என்னை அழைத்து சென்று பத்திரம் பதிவு செய்தது தான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். கிரையம் பதிய என்னை கூட்டிட்டு போனது மட்டும்தான் தெரியும். கிரைய பதிவு 11.9.2014–ஆம் தேதி அன்று நடைபெற்றது என்றால்? அது எனக்கு தெரியாது.

6. வாதியின் தாயார் வீரம்மாள் கிரயம் பெற கடன் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால்? ஆமாம். சொத்து வாங்குவதற்கு தான் கடன் பெற்றோம் அதன் பிறகு கடனை திருப்பிக் கொடுத்து விட்டோம். புரோக்கர் மூலமாக கடன் கொடுத்தார்கள் புரோக்கர் இறந்துவிட்டார். 12.9.2014–ஆம் தேதி என்றுதான் வீரம்மாள் எங்களிடமிருந்து அடமான பத்திரம் எழுதிக் கொண்டார் என்றால்? அது எனக்கு தெரியாது. எனக்கு படிப்பறிவு கிடையாது.

7. வீட்டின் அசல் கிரைய பத்திரம் யார் வசம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால்? வீரமாள் வசம் உள்ளது. கடன் தொகை எப்பொழுது திருப்பி கொடுத்தோம் என்று தேதி ஞாபகம் உள்ளதா என்றால்? ஞாபகம் இல்லை. 10 வருடங்கள் ஆகிவிட்டது. கடனை திருப்பிக் கொடுத்த பின்னர் அடமானக் கடனை ரத்து செய்து கொடுக்குமாறு கேட்டோமா என்றால் கேட்டோம் அந்த அம்மா தரேன் என்று கூறியவர் ரத்து செய்து கொடுக்கவில்லை.

8. கடனை எத்தனை வருடங்களுக்கு முன்னர் திருப்பிக் கொடுத்தோம் என்றால் கடன் பெற்ற இரண்டு வருடங்களுக்குள்ளாக திருப்பிக் கொடுத்து விட்டோம். பத்திரத்தை திருப்பிக் கொடுக்கவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்க வில்லையா என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை அந்த அம்மா தான் பத்திரத்தை திருப்பிக் கொடுப்பதாக கூறினார். வாதி மேற்படி வீரம்மாளின் மகன் என்ற விபரம் தெரியுமா என்றால் முதலில் தெரியாது நீதிமன்றத்திற்கு வந்த பின்னர் தான் தெரியும். 22.9.2014–ஆம் தேதி அன்று மீண்டும் ரூபாய் இரண்டு லட்சம் வாதிடமிருந்து கடன் பெற்றோமா என்றால் பெறவில்லை.

9. 22.9.2014 ஆம் தேதி அன்று சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று மீண்டும் கையொப்பம் செய்தோம் என்றால் வீரம்மாள் கூறியதன் பெயரில்தான் கையொப்பம் செய்தோம். வீரம்மாளுக்கு கையொப்பம் செய்யும்பொழுது சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். ஸ்ரீமானுக்கு எழுதிகொடுத்த பத்திரத்திற்கும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று தான் கையொப்பம் செய்தோம் என்றால்? அது வீரம்மாள் கூறியதன் பெயரில்தான் கையொப்பம் செய்தோம் ஸ்ரீமானுக்கு என்று எங்களுக்கு தெரியாது.

10. வழக்கு தாக்கல் செய்த பின்னர் ஆவது வாதிக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் ஏதாவது அளித்துள்ளன என்றால்? அளிக்கவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும் முன்னர் சார்பதிவாளர் பணத்தை பெற்றுக் கொண்டீர்களா என்று கேட்டுவிட்டு தான் கையப்பம் பெற்றார் என்றால்? சரியல்ல. சார் பதிவாளர் எங்களிடம் கேட்கவில்லை. ஒவ்வொரு ஆவணங்களை பதிவு செய்யும் முன்னரும் சார்பதிவாளர் பத்திர மற்றும் பணம் பெற்றது குறித்து கேட்பது வழக்கம் என்றால் சரியல்ல.

11. வீரம்மாள் எனக்கு எதிராகவும் முருகனுக்கு எதிராகவும் அடமான பத்திர கடன் தொகையை கேட்டு அசல் வழக்கு எண்.212/2023 என்று தாக்கல் செய்துள்ளார் என்றால்? சரிதான். அந்த அம்மாள் தாக்கல் செய்த வழக்கில் நானும் முருகனும் எதிர்வாதம் எதுவும் செய்யவில்லை என்றால்? சரிதான். பணத்தை திரும்ப பெற்ற பின்னர் எதற்காக வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்று வீரமாளை பார்த்து கேட்டேனா என்றால்? அந்த அம்மா இறந்து போய்விட்டார்.

12. வீரம்மாள் தாக்கல் செய்த வழக்கில் நானும் முருகனும் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகவில்லை என்றால்? சரியல்ல. ஆஜராகி உள்ளேன். வீரம்மாள் உயிருடன் இருந்த பொழுது எங்களிடம் பலமுறை பணத்தை கேட்டும் நிங்கள் திருப்பிக் கொடுக்காததால் தான் அவர் வழக்கை தாக்கல் செய்தார் என்றால்? சரியல்ல. இவ்வழக்கில் என்னுடைய தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் உரையில் நான் பணத்தை திருப்பிக் கொடுத்தேன் என்றும் பத்திரத்தை திருப்பிக் கொடுக்கவில்லை என்றும் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

13. என்னுடைய பதில் உரையில் பணத்தை திருப்பிக் கொடுத்து விட்டதாக கூறி எதிர்வாதம் செய்யவில்லை என்றாலும், பணமே பெறவில்லை என்று தான் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால்? சரியல்ல. **வா.சா.ஆ. 1ல்** உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதாகும். இரண்டாவதாக போடப்பட்டுள்ள கையொப்பம் முருகனுடைய தாகும். மேற்படி பத்திரத்தில் உள்ள புகைப்படம் என்னுடையது என்றால்? சரிதான். என்னுடைய புகைப்படத்திற்கு அடுத்ததாக முருகனின் புகைப்படம் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய புகைப்படத்திற்கு அருகில் என்னுடைய இடது கை பெருவிரல் ரேகை வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

14. **வா.சா.ஆ 2-ல்** உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதாகும். இரண்டாவது கையொப்பம் முருகனுடையதாகும். மேற்படி பத்திரத்தில் என்னுடைய புகைப்படம் அதற்கு அடுத்ததாக முருகனின் புகைப்படமும் உள்ளது. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று தான் புகைப்படம் எடுக்கப்பட்டது என்றாலும் கையொப்பம் கைரேகை பெறப்பட்டது என்றாலும் சரிதான். **வா.சா.ஆ 3-ல்** உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதாகும் இரண்டாவது கையொப்ப முருகனுடையதாகும். மேற்படி பத்திரத்தில் என்னுடைய புகைப்படம் அதற்கு அடுத்ததாக முருகனின் புகைப்படமும் உள்ளது. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று தான் புகைப்படம் எடுக்கப்பட்டது என்றாலும் கைரேகை பெறப்பட்டது என்றாலும் சரிதான். அந்த அம்மா

போய் உட்காருங்கள் புகைப்படம் எடுப்பார்கள் என்று கூறினார்கள் அதனால் சென்றோம்.

15. என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட எல்லா விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால்? தெரியாது. எனக்கு படிப்பறிவே கிடையாது. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் கையொப்பம் செய்யுமாறு கூறியதன் பெயரில் நான் கையொப்பம் செய்தேன். விபரங்களை கேட்டார்கள் நான் விபரங்களை கூறினேன். பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளை நான் கூறவில்லை என்றால் சரிதான்.

16. முருகனும் என்னுடைய மனைவியும் அரசு வேலையில் உள்ளார்கள் என்றாலும் அனைத்து விபரங்களும் தெரிந்ததுதான் வாதியினுடைய தயாரிடம் கடன் பெற்று தாவா சொத்தை வாங்கி உள்ளோம் என்றால்? சரியல்ல. எங்கள் மீது இருந்த நம்பிக்கையின் பெயரில்தான் நாங்கள் சொத்தை வாங்காத பொழுதும் வீரம்மாள் பணத்தை கொடுத்து தாவா சொத்தை வாங்க வைத்தார் என்றால் சரியல்ல.

17. தாவா சொத்தை வாங்கிய பின்னர் மறுநாள் தான் அந்த அம்மாவுக்கு அடமான கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தோம் என்றால்? அது எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தின் அசல் வாதியின் தாயாரிடம் இருந்ததால் தான் இரண்டாவது அடமான கடன் எழுத இயலாது என்பதால் வாதியிடம் கடன் பெற்று விட்டு கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக் கொடுத்தோம் என்றால்? சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியாது என்றும் படிப்பறிவு இல்லாதவர் என்று பொய்யாக எதிர் வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

18. உண்மையில் நான் வீரமாளிடம் பெற்ற கடனை திருப்பிக் கொடுத்திருந்தால் அவருக்கு எதிராக சட்டபடியாக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால்? சரியல்ல. இவ்வழக்கில் இரண்டாம் பிரதிவாதியான முருகனை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால்? தயாராக இல்லை. கிரைய பத்திரம் அடமான பத்திரம் மற்றும் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள சாட்சிகளை சாட்சிகளாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால்? அந்த சாட்சிகளை அந்த அம்மா தான் போட்டார் நாங்கள் யாரையும் சாட்சியாக இருக்குமாறு கூறவில்லை.

19. மேற்படி பத்திரங்களில் எங்களுடைய உறவினர்கள் தான் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள விசயங்கள் அனைத்தும் என்னுடைய பிரமாண வக்குமூலம் மற்றும் பதில் உரை உரையில் குறிப்பிடவில்லை என்றாலும் முதல் முறையாக தற்பொழுது தான் குறுக்கு விசாரணையில் மேற்கண்டவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றான் சரியல்ல. நான் வாதியிடம் பெற்ற கடன் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

20. நானும் என்னுடைய குடும்பத்தார் சேர்ந்துதான் வாதியிடம் கடன் பெற்றோம் என்றாலும் ஆனால் வழக்கிற்காக அதை மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல என்னுடைய எதிர்வாதம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/– G. ரூபனா,
கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.